# இப்னுமாஜா

## ஹதீஸ் தொகுப்பு (70 ஹதீஸ்கள் மட்டும்)



நன்றி : islamiyadawa.com

மின் நூல் தொகுப்பு

குலசை.Engr..சுல்தான்.

## பொருளடக்கம்


இமாம் இப்னுமாஜா ........................................................................................................ 3

இப்னுமாஜா ஹதீஸ் தொகுப்பு............................................................................................. 4

பாடம்: *1* நபி வழியைப் பின்பற்றுதல் ...................................................................... 4

பாடம்: *2* ஹதீஸ்களை கண்ணியப்படுத்துவதும் அதனை புறக்கணிப்பவர்களிடம் கடுமை காட்டுவதும் ........................................................................................................ 8

பாடம்: *3* நபி (ஸல்) அவர்களைப் பற்றி அறிவிப்பதில் எச்சரிக்கையாக இருத்தல் .13

பாடம்: *4* நபி (ஸல்) பெயரால் திட்டமிட்டுப் பொய் கூறுவது கண்டிக்கத் தக்கது ..16

பாடம்: *5* அபிப்பிராயங்களையும், அனுமானங்களையும் தவிர்த்துக் கொள்ளல் ......24

ஈமான் பற்றிய பாடம் ......................................................................................26

## இமாம் இப்னுமாஜா

நபி (ஸல்) அவர்களின் பொன்மொழிகளைத் தொகுத்து இம்மார்க்கத்திற்குத் தொண்டாற்றிய இமாம்களில் இப்னுமாஜா ஒருவராவார்.

இயற்பெயர் : முஹம்மத் பின் யஸீத்

குறிப்புப் பெயர் : அபூ அப்தில்லாஹ்

தந்தை பெயர் : யஸீத். மாஜா என்பது இவரது பட்டப்பெயர்.

பிரபலமான பெயர் : இப்னு மாஜா

கோத்திரம் : ரபயீ கோத்திரத்தைச் சார்ந்தவர்.

பிறப்பு : ஹிஜ்ரீ ***209*** ஆம் ஆண்டு.

வளர்ந்த இடம் : கஸ்வீன் என்ற ஊர்

கல்வி : இப்னு மாஜா அவர்கள் கஸ்வீன் என்ற தன்னுடைய ஊரில் ஏறத்தாழ ***20***ஆவது வயதில் கல்வி கற்க ஆரம்பித்தார்கள். இவர்கள் தொகுத்த இப்னுமாஜா என்ற ஹதீஸ் புத்தகம் ஹதீஸ் கலையில் இவர்கள் பெற்றிருந்த பாண்டித்துவத்தை எடுத்துரைக்கிறது. அறிவிப்பாளர்களின் வரலாறுகள் தொடர்பாக இவர் எழுதிய அத்தாரீஹ் என்ற நூலும் இவரது அந்தஸ்தை உயர்த்துகிறது. மேலும் இவர் குர்ஆனிற்கு விளக்கம் அளிப்பதிலும் மார்க்கச் சட்டங்களிலும் தலை சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார் என இமாம்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

கல்விக்காகப் பயணித்த ஊர்கள் : குராசான், ஈராக், ஹிஜாஸ், மிஸ்ர், ஷாம் மற்றும் பல ஊர்கள்.

இவரது ஆசிரியர்கள் : அப்துல்லாஹ் பின் அபீஷைபா, அலீ பின் முஹம்மத், முஸ்அப் பின் அப்தில்லாஹ், உஸ்மான் பின் அபீஷைபா மற்றும் பலர்.

இவரது மாணவர்கள் : அலீ பின் இப்ராஹீம் அல்கத்தான், சுலைமான் பின் யஸீத், முஹம்மது பின் ஈஸா மற்றும் அபூபக்கர் ஹாமித்.

படைப்புகள் : இப்னு மாஜா அவர்களால் தொகுக்கப்பட்ட சுனனு இப்னு மாஜா என்ற புத்தகத்துடன் அத்தஃப்ஸீர், அத்தாரீஹ் என்ற புத்தகங்களையும் தொகுத்துள்ளார். இவற்றில் சுனனு இப்னு மாஜா மட்டும் நமக்கு கிடைத்துள்ளது. மற்றவை அழிந்து விட்டன.

இறப்பு : ஹிஜ்ரீ ***273*** ஆம் வருடம் ரமலான் மாதத்தில் திங்கட்கிழமை அன்று மரணித்து புதன் கிழமை அடக்கம் செய்யப்பட்டார்.

## இப்னுமாஜா ஹதீஸ் தொகுப்பு

### அத்தியாயம்: முகத்திமா - முகப்பு

### பாடம்: *1* நபி வழியைப் பின்பற்றுதல்

***ஹதீஸ் எண்: 1***

'நான் எதை உங்களுக்குக் கட்டளையிடுகிறேனோ, அதை எடுத்து நடங்கள்! எதை விட்டும் உங்களை நான் தடுக்கின்றேனோ, அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இதே பொருள் கொண்ட ஹதீஸ் நஸயீ *5646* என்ற நூலிலும் இடம் பெற்றுள்ளது.)

***ஹதீஸ் எண்: 2***

'நான் (உங்களுக்கு எதுவும் கூறாது) விட்டுவிடும் போது, நீங்களும் என்னை (கேள்விகள் கேட்காது) விட்டுவிடுங்கள்! ஏனெனில் உங்களுக்கு முன் வாழ்ந்தவர்கள் தங்கள் நபிமார்களிடம் கேள்வி கேட்டதனாலும், அவர்களுக்கு முரண்பட்ட காரணத்தாலுமே அழிந்து போயினர். நான் ஏதேனும் உங்களுக்குக் கட்டளையிட்டால் உங்களால் இயன்ற அளவு அதை செயல்படுத்துங்கள்! எதையாவது நான் உங்களுக்குத் தடுத்தால் அதை தவிர்த்துக் கொள்ளுங்கள்!' என நபி (ஸல்) கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: புகாரி *7288*, முஸ்லிம் *1337*, இப்னு ஹுஸைமா *2508*, இப்னு ஹிப்பான் *18*,*21*, பைஹகீ குப்ரா *1693* ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

***ஹதீஸ் எண்: 3***

எனக்குக் கட்டுப்பட்டவன் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவனாவான், எனக்கு மாறு செய்பவன் அல்லாஹ்வுக்கு மாறு செய்பவனாவான் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸோடு, 'என்னால் நியமிக்கப்பட்ட அமீருக்கு கீழ்படிந்தவர் எனக்கு கீழ்படிந்தவர் ஆவார். என்னால் நியமிக்கப்பட்ட தலைவருக்கு மாறுசெய்தவர் எனக்கு மாறுசெய்தவர் ஆவார்' என்ற வாசகங்கள் கூடுதலாக, புஹாரி *7137*, முஸ்லிம் ***4518***, அஹ்மத் *7428* ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது. மேலும் இப்னுமாஜா ***2859*** லும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 4*

'நபி (ஸல்) அவர்களிடமிருந்து இப்னு உமர் (ரலி) எதையாவது செவியுற்றால் அதைவிட அதிகப்படுத்தாதவர்களாகவும் அதைவிட குறைக்காதவர்களாகவும் திகழ்ந்தார்கள்' என்று அபூஜ.்.பர் (ரலி) அறிவிக்கிறார்கள்.

### *ஹதீஸ் எண்: 5*

வறுமையைப் பற்றி பேசிக் கொண்டும், அதுபற்றி அச்சம் தெரிவித்துக் கொண்டும் நாங்கள் இருந்த போது, நபி (ஸல்) அவர்கள் எங்களை நோக்கி வந்து 'வறுமையை (நினைத்தா) அஞ்சுகிறீர்கள்? எனது உயிர் எவன் கைவசமுள்ளதோ அவன் மீது ஆணையாக (வருங்காலத்தில்) இந்த உலக(த்துச் செல்வ)ம் ஒரேயடியாக உங்கள் மீது பொழியப்படும்! உங்களின் உள்ளத்தை (நல்வழியை விட்டும்) ஒரேயடியாக திசை திருப்பிவிடக் கூடியதாகத் தான் அந்தச் செல்வம் அமையும். அல்லாஹ்வின் மீது ஆணை! வெள்ளை வெளேர் என்ற பாதையில் நான் உங்களை விட்டுச் செல்கிறேன். அதில் இரவும் பகலும் சமமானதாக இருக்கும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபுத்தர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

'அல்லாஹ்வின் மீது ஆணையாக, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், உண்மையே உரைத்தார்கள். (அவர்கள் கூறியவாறு) எங்களை இரவும் பகலும் ஒன்று போல் இருக்கின்ற வெள்ளை வெளேர் என்ற பாதையிலேயே விட்டுச் சென்றார்கள்' என்றும் அபுத்தர்தா (ரலி) அவர்கள் குறிப்பிடுவார்கள்.

### *ஹதீஸ் எண்: 6*

'யுக முடிவு நாள் வரை எனது உம்மத்தில் ஒரு பிரிவினர் (இறைவனால் உதவி) செய்யப்படுபவர்களாக இருந்து கொண்டே இருப்பார்கள். அவர்களை எதிர்ப்பவர்களால் அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்ய முடியாது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக தம் தந்தை வழியாக முஆவியா (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் முஸ்லிம் ***4715***, திர்மிதி ***2330***, அஹ்மத் ***15635***, இப்னு ஹிப்பான் ***61*** ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது. திர்மிதியில் இடம் பெற்றிருக்கும் ஹதீஸில், 'வழிகெடுக்கும் தலைவர்களைப் பற்றியே என் சமுதாயம் குறித்து நான் அஞ்சுகிறேன்' என்ற வாசகம் ஹதீஸின் ஆரம்பத்தில் கூடுதலாக இடம் பெறுகிறது.)

***ஹதீஸ் எண்: 7***

'எனது உம்மத்தில் ஒரு பிரிவினர் இறைவனின் கட்டளைகள் மீது நின்று கொண்டே இருப்பார்கள். அவர்களை எதிர்ப்பவன் அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்திட இயலாது' என நபி (ஸல்) கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

***ஹதீஸ் எண்: 8***

'இந்த மார்க்கத்தில் அல்லாஹ் ஒரு சாராரை உருவாக்கிக் கொண்டே இருப்பான். அவர்களை தனது சேவைக்காக பயன்படுத்திக் கொள்வான்' என நபி (ஸல்) அவர்கள் சொன்னதாக அபூஇனபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: அஹ்மத் ***17817***, இப்னு ஹிப்பான் ***326*** ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

***ஹதீஸ் எண்: 9***

ஒரு நாள் முஆவியா (ரலி) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்த எழுந்தார்கள். உங்கள் மார்க்க அறிஞர்கள் எங்கே? உங்கள் மார்க்க அறிஞர்கள் எங்கே? என்று கேட்டு விட்டு, 'தங்களை எதிர்ப்பவர்களையும் ஆதரிப்பவர்களையும் பொருட்படுத்தாத ஒரு சாரார் மக்களை மிகைத்துக் கொண்டே இருப்பார்கள். இந்த நிலை ஏற்படாத வரை

யுகமுடிவு நாள் ஏற்படாது' என்று நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றிருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் புஹாரி *3641*,*7460*, முஸ்லிம் *3887*, அஹ்மத் *16956*,*16973* ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது. இந்த நூல்களில் 'உங்கள் மார்க்க அறிஞர்கள் எங்கே? உங்கள் மார்க்க அறிஞர்கள் எங்கே? என்று கேட்டு விட்டு,' என்ற பகுதி இடம் பெறவில்லை.)

### *ஹதீஸ் எண்: 10*

'எனது சமுதாயத்தில் ஒரு பிரிவினர் சத்தியத்திற்காக உதவி செய்யப்பட்டவர் களாக இருந்து கொண்டே இருப்பார்கள். அல்லாஹ்வின் கட்டளை வரும் வரை அவர்களை எதிர்ப்பவர்களால் அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்து விட முடியாது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸவ்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் முஸ்லிம் *3883* நூலிலும் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 11*

'நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்த போது, ஒரு நேர்கோடு வரைந்தார்கள். பிறகு அந்தக் கோட்டுக்கு வலது புறமாக இருகோடுகளையும், இடது புறமாக இரண்டு கோடுகளையும் வரைந்தார்கள். பின்னர் நடுவில் உள்ள நேர்கோட்டில் தமது கையை வைத்துக் கொண்டு, இது தான் இறைவனின் நேரான வழியாகும் என்று கூறி விட்டு, 'இதுதான் எனது நேரான வழியாகும், இதனையே பின்பற்றுங்கள்! பல வழிகளைப் பின்பற்ற வேண்டாம்! (பலவழி செல்வது) அவனுடைய ஒரே வழியை விட்டும் உங்களை அகற்றி விடும்!' (அல்குர்ஆன் *6*:*153*) என்ற வசனத்தையும் ஓதிக் காட்டினார்கள்' என்று ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: அஹ்மத் *4142*,*4437*,*15312* தாரிமி *202*, இப்னுஹிப்பான் *6*,*7* ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

## பாடம்: 2 ஹதீஸ்களை கண்ணியப்படுத்துவதும் அதனை புறக்கணிப்பவர்களிடம் கடுமை காட்டுவதும்

### *ஹதீஸ் எண்: 12*

எனது ஹதீஸிலிருந்து ஒரு ஹதீஸ் கூறப்படும் போது, 'எங்களுக்கும் உங்களுக்குமிடையில் அல்லாஹ்வின் வேதம் இருக்கிறது, அதில் ஏதேனும் அனுமதிக்கப்பட்டிருந்தால், அதை நாம் அனுமதிக்கப்பட்டதாக கொள்வோம். அதில் தடை செய்யப்பட்டவைகளை நாம் தடை செய்யப்பட்டதாகக் கொள்வோம்' என்று தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு சிலர் கூற முற்படுவார்கள். எச்சரிக்கிறேன்! அல்லாஹ்வின் தூதர் தடுத்தவைகளும் அல்லாஹ் தடுத்தவை போன்றது தான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக மிக்தாம் இப்னு ம:்தீகரிப் (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: திர்மிதி *2801*, தாரிமி *586* ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது)

### *ஹதீஸ் எண்: 13*

'நான் கட்டளையிட்ட, அல்லது தடுத்த ஒரு செய்தி ஒருவனுக்கு கிடைக்கும் போது, '(அதெல்லாம்) எனக்குத் தெரியாது அல்லாஹ்வின் வேதத்தில் எதை பெறுகிறோமோ அதையே பின்பற்றுவோம்' என்று ஆசனத்தில் சாய்ந்து கொண்டு (அதாவது அலட்சியமாக) ஒருவன் கூறக்கூடாது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று அபூராபிவு (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் திர்மிதி *2800*, அபூதாவூத் *4605* ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது)

### *ஹதீஸ் எண்: 14*

'நமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யாரேனும் உருவாக்கினால் அது (இறைவனால்) நிராகரிக்கப்படும்' என்று நபி (ஸல்) கூறியதாக அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: புகாரி, முஸ்லிம் அஹ்மத் ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது)

### *ஹதீஸ் எண்: 15*

பேரீத்த மரங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காக உள்ள 'ஒரு வாய்க்கால்' விஷயத்தில் ஸுபைர் (ரலி) மீது அன்சாரிகளைச் சேர்ந்த மனிதர் ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வழக்குக் கொண்டு வந்தார். (வழக்கு என்னவென்றால்) தண்ணீரை அதன் போக்கில் விட்டுவிட வேண்டும், (தடுத்து தன் தோட்டத்திற்குப் பாய்ச்சக் கூடாது) என்பது அன்சாரி மனிதரின் வாதம். (தனது தோட்டத்துக்கு) நீர் பாய்ச்சும் வரை வாய்க்காலை அடைத்துக் கொள்வேன், அதன் பிறகே திறந்து விடுவேன் என்று ஸுபைர் (ரலி) மறுக்கிறார். இதுதான் வழக்கு!)

ஸுபைரே! (உனது தோட்டத்திற்கு) நீ நீர் பாய்ச்சி விட்டு, அதன் பின் உன் பக்கத்துத் தோட்டத்தாருக்காக தண்ணீரை விட்டு விடு!' என்று நபி (ஸல்) அவர்கள் நீதி வழங்கினார்கள்.

'அல்லாஹ்வின் தூதரே! உங்களின் மாமி மகன் என்பதனால் தான் (ஸுபைருக்கு சாதகமாக) தீர்ப்பு வழங்குகிறீர்களா?' என்று அந்த அன்சாரி கேட்டார்.

(இதைக் கேட்டதும்) நபி (ஸல்) அவர்களின் முகம், நிறம் மாறியது. பின்னர் (ஸுபைரை நோக்கி) ஸுபைரே! உனது தோட்டத்திற்கு நீ நீர் பாய்ச்சிக் கொள். அதன் பின்பும் தண்ணீரை தடுத்துக் கொள்! அது வரப்பு (வழியாக நிரம்பி வழிந்து) செல்லட்டும்! என்று (கோபமாகக்) கூறினார்கள்.

'தங்களுக்குள் ஏற்பட்ட பிணக்குகளில் உம்மை நீதிபதியாக ஏற்று, நீ அளித்த தீர்ப்பு பற்றி தங்கள் உள்ளத்தில் அதிருப்தியும் கொள்ளாது, முழுமையாக கட்டுப்படும் வரை உமது இறைவன் மேல் ஆணையாக அவர்கள் விசுவாசிகளாக மாட்டார்கள். (*4:65*) என்ற வசனம் இவருக்காகவே இறங்கியதாக அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் கருதுகிறேன் என்று ஸுபைர் (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: புகாரி *4585*, முஸ்லிம் *2357*, அபூதாவூத் *3630*, இப்னுமாஜா *2480*, திர்மிதி *1374*, *5017* ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது. புகாரி, திர்மிதி ஆகிய நூல்களில் 'ஹர்ரா' என்னும் இடத்தில் இருந்த வாய்க்கால் விஷயத்தில்' என்ற விபரம் கூடுதலாக இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 16*

'பெண்கள் பள்ளிவாசலுக்கு வந்து தொழுவதைத் தடுக்கக் கூடாது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (ரலி) கூறினார்கள். அதைக் கேட்ட அவர்களின் (பிலால் என்ற) மகன் 'நிச்சயமாக நாங்கள் பெண்களை தடுக்கத்தான் செய்வோம்' என்றார். உடனே இப்னு உமர் (ரலி) அவர்கள் கடும் கோபமுற்று, 'அல்லாஹ்வின் தூதருடைய செய்தியை நான் உனக்குக் கூறுகிறேன். நாங்கள் தடுப்போம் என்கிறாயா?' என மகனைக் கண்டித்தார்கள் என்று அவரது மகன் ஸாலிம் என்பார் அறிவிக்கிறார்.

(குறிப்பு: புஹாரி *858*, முஸ்லிம் *442*, தாரிமி *1279*, அபூதாவூது *566*, பைஹகீ *9908* முஅத்தா *465* ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது. 'பெண்கள் பள்ளிவாசலுக்கு வந்து தொழுவதைத் தடுக்கக் கூடாது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் போன்ற வாசகங்கள் மட்டும் இடம்பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 17*

அப்துல்லாஹ் இப்னு முகப்பல் (ரலி) அவர்களுக்கு அருகே அவர்களின் சகோதரி மகன் ஒருவர் (சிறுகற்களைத் தம் விரல்களால்) சுண்டிக் கொண்டிருந்தார். அதைக்கண்ட அப்துல்லாஹ் இப்னு முகப்பல் (ரலி) அவர்கள் இப்படி விளையாடுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்திருக்கிறார்கள். 'இதனால் எதனையும் வேட்டையாடவும் முடியாது, எதிரியை வீழ்த்தவும் முடியாது. மாறாக (எவரது) பல்லையாவது உடைத்துவிடும், (எவரது) கண்ணையாவது பறித்துவிடும்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் எனக்கூறி தம் சகோதரர் மகனைத் தடுத்தார்கள்.

இதன் பின்பும் அவர்களின் சகோதரர் மகன் அதே காரியத்தை

செய்யலானார். இதைக் கண்ட அப்துல்லாஹ் இப்னு முகப்பல் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் தடுத்ததாக நான் உனக்குத் தெரிவித்த பின்னரும் நீ சுண்டி விளையாடுகிறாயா? இனிமேல் ஒருபோதும் நான் உன்னிடம் பேசவே மாட்டேன்' என்று கூறினார்கள் என்று ஸயீத் இப்னு ஜுபைர் என்பார் அறிவிக்கிறார்.

(குறிப்பு: புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

## *ஹதீஸ் எண்: 18*

உபாதா இப்னுஸ்ஸாமித் (ரலி) என்ற நபித்தோழர் முஆவியா (ரலி) அவர்களின் தலைமையில் இத்தாலி (ரூம்) நாட்டுடன் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். அங்குள்ள மக்கள் 'தங்கக் கட்டிகளை தங்க நாணயத்திற்கும் வெள்ளிக் கட்டிகளை வெள்ளி நாணயத்திற்கும் நாணயமாற்று செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். 'மனிதர்களே! நீங்கள் வட்டியை உண்ணுகிறீர்கள்! சமமான அளவில் தவிர தங்கத்தை தங்கத்திற்கு விற்பனை செய்யக் கூடாது.

அவ்விரண்டுக்குமிடையில் (பெறும் போதும், கொடுக்கும் போதும்) ஏற்றத்தாழ்வு கூடாது. மேலும் (சம எடையில் உள்ள தங்கக்கட்டிகளையும், தங்க நாணயங்களையும்) தவணை முறையிலும் மாற்றலாகாது என்று நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றிருக்கிறேன் என்று உபாதா (ரலி) குறிப்பிட்டார்கள்.

இதைக் கேட்ட முஆவியா (ரலி) அவர்கள் அபுல் வலீதே! தவணை முறையில் தங்க (நாணயத்தையும், தங்க கட்டியையும்) மாற்றம் செய்தால் தவிர இதில் வட்டிப்பிரச்சனை இருப்பதாக நான் கருதவில்லை' என்று கூறினார்கள்.

நான் நபி (ஸல்) அவர்கள் கூறிய செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். நீங்கள் உங்கள் சொந்தக் கருத்தைத் தெரிவிக்கிறீர்கள்! (இங்கிருந்து) அல்லாஹ் என்னைப் புறப்பட வைத்து விட்டால் என்மீது உனக்கு அதிகாரம் இருக்கும் நிலப்பரப்பில் உமக்குக் கீழ் நான் வாழமாட்டேன்' என்று உபாதா (ரலி) கூறினார்கள். அங்கிருந்து புறப்பட்டு மதீனாவைச் சென்றடைந்து விட்டார்கள்.

அபுல் வலீதே! ஏன் (மதீனாவுக்கு) வந்து விட்டீர்? என்று (அப்போதைய ஜனாதிபதி) உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அவர் நடந்த விபரங்களை எடுத்துச் சொன்னார்.

அபுல்வலீதே! உமது ஊருக்குத் திரும்பிச் செல்வீராக! நீரும் உம்போன்றவர்களும் இல்லாத நிலப்பரப்பை இறைவன் இழிவு படுத்துவானாக என்று உமர் (ரலி) கூறிவிட்டு, 'உமக்கு இவர் மீது எந்த அதிகாரமுமில்லை, இவர் கூறியவாறே மக்களுக்குச் சட்டமியற்றுவீராக! இவர் கூறுவதே சட்டமாகும் என்று முஆவியா (ரலி) அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள்.

(குறிப்பு: இந்தக் கருத்து முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத், நஸயீ ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது)

### *ஹதீஸ் எண்: 19*

நான் நபி (ஸல்) அவர்களைப் பற்றி எதையேனும் உங்களுக்கு அறிவித்தால் 'நபி (ஸல்) அவர்கள் தாமே அதை எடுத்து நடந்தவர்களாக- தாமே அதுபற்றி அஞ்சி நடந்தவர்களாக - தாமே அதைத் தெளிவு படுத்தியவர்களாக இருந்திருக்கிறார்கள்' என்று அவர்களைப் பற்றி புரிந்து கொள்ளுங்கள் என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

### *ஹதீஸ் எண்: 20*

நான் நபி (ஸல்) அவர்களைப் பற்றி எதையேனும் உங்களுக்கு அறிவித்தால் 'நபி (ஸல்) அவர்கள் தாமே அதை எடுத்து நடந்தவர்களாக- தாமே அதுபற்றி அஞ்சி நடந்தவர்களாக - தாமே அதைத் தெளிவு படுத்தியவர்களாக இருந்திருக்கிறார்கள்' என்று அவர்களைப் பற்றி புரிந்து கொள்ளுங்கள் என அலீ இப்னு அபூதாலிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

### *ஹதீஸ் எண்: 21*

என் வழியாக ஏதேனும் ஒரு செய்தி உங்களில் எவருக்கேனும் அறிவிக்கப்படும் போது, 'அவர் தமது ஆசனத்தில் சாய்ந்து கொண்டு (அதாவது அலட்சியமாக) குர்ஆனை ஓதிக் காட்டு! என்று கூறலாகாது.

(அதாவது குர்ஆனில் கூறப்பட்டதை மட்டுமே ஏற்போம்! ஹதீஸ்களை ஏற்கமாட்டோம் என்று கூறலாகாது) அழகான கருத்துக்கள் (எவர் மூலமாவது) சொல்லப்படுமானால் அதை நானும் சொல்லியிருக்கிறேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸில் மக்புரி என்பார் தனது பாட்டனார் வழியாக அறிவிப்பதாக உள்ளது. அவர் யாரெனத் தெரியவில்லை)

### *ஹதீஸ் எண்: 22*

என் சகோதரர் மகனே! அல்லாஹ்வின் தூதர் வாயிலாக உனக்கு நான் எதையாவது கூறும் போது அதற்கு (எதிராக) உதாரணங்களை நீ கூறிக் கொண்டிராதே! என்று அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஒரு மனிதரிடம் கூறினார்கள் என்று அபூஸலமா அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: ஹாகிமிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது)

## பாடம்: 3 நபி (ஸல்) அவர்களைப் பற்றி அறிவிப்பதில் எச்சரிக்கையாக இருத்தல்

### *ஹதீஸ் எண்: 23*

இப்னு மஸ்வூது (ரலி) அவர்களிடம் வியாழன் மாலைதோறும் நான் வருவதற்கு தவறியதே இல்லை. அவர்கள் எந்த ஒரு செய்தியையும் 'ரஸூல் (ஸல்) சொன்னார்கள்' என்று கூறி நான் கேட்டதில்லை. ஒரு (வியாழன்) மாலையில் ரஸூல் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் என்று (ஒரு செய்தியைக்) கூறினார்கள். (கூறியதும்) தலை கவிழ்ந்தார்கள், அவர்களை ஏறிட்டு நான் நோக்கிய போது சட்டைப் பித்தான்கள் அவிழ்ந்து, கண்களிரண்டும் கண்ணீரைச் சொரிய பிடரி நரம்புகள் புடைக்க நின்று கொண்டிருந்தார்கள். 'நபி (ஸல்) அவர்கள் நான்

கூறியதை விட குறைவாகவோ, அல்லது அதைவிட சற்று அதிகமாகவோ, அல்லது நான் கூறியதற்கு நிகராகவோ அல்லது நான் கூறியது போலவோ கூறினார்கள்' என்று இப்னுமஸ்வூது (ரலி) குறிப்பிட்டார்கள். (அதாவது நபி (ஸல்) அவர்கள் என்ன வார்த்தையைக் கூறினார்கள் என்பது திட்டவட்டமாக நினைவில்லாததால், அதில் மிகவும் பேணுதலுடன் இந்த வாசகத்தையும் சேர்த்துக் கொள்கிறார்கள்) என்று அம்ரு இப்னு மைமூன் அறிவிக்கிறார்.

(குறிப்பு: ஹாகிமிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 24*

அனஸ் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்கள் வாயிலாக எதையாவது அறிவிக்கும் போது உள்ளம் நடுங்குவார்கள். மேலும் '(இதே வார்த்தையையோ) அல்லது இது போன்ற வேறு வார்த்தைகளையோ நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்' என்றும் குறிப்பிடுவார்கள் என முஹம்மது இப்னு ஸீரீன் அறிவிக்கிறார்.

### *ஹதீஸ் எண்: 25*

நாங்கள் ஸைது இப்னு அர்கம் (ரலி) என்ற நபித்தோழரிடம், 'நபி (ஸல்) வாயிலாக (வந்த ஹதீஸ்களை) எங்களுக்கு அறிவியுங்கள்!' என்று கேட்டோம். அதற்கு அவர்கள் நாங்கள் முதுமை அடைந்து விட்டோம், (அதனால்) மறந்து விட்டோம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சம்மந்தப்பட்டவைகளை அறிவிப்பது மிகவும் கடுமையான ஒன்றாகும். (அறைகுறை நினைவில் ஹதீஸ்களை கூறலாகாது) என்று கூறினார்கள் என அப்துர்ரஹ்மான் இப்னு அபீலைலா அறிவிக்கிறார்.

### *ஹதீஸ் எண்: 26*

நான் இப்னு உமர் (ரலி) அவர்களிடம் ஓராண்டு காலம் உடனிருந்திருக்கிறேன். (அந்த ஓராண்டு காலத்தில்) அல்லாஹ்வின் தூதர் வழியாக எந்த ஒன்றையும் அவர்கள் கூறி நான் செவியுற்றதில்லை என்று இமாம் ஷு:அபீ அவர்கள் குறிப்பிடுட்டார்கள்.

### *ஹதீஸ் எண்: 27*

நாங்கள் (ஒரு காலத்தில்) ஹதீஸ்களை மனனம் செய்பவர்களாக இருந்தோம். அல்லாஹ்வின் தூதர் பற்றிய செய்திகள் (அக்காலத்தில்) மனனம் செய்யப்பட்டன. ஆனால் முரட்டு வாகனங்களிலும், அடங்கி நடக்கும் வாகனங்களிலும் நீங்கள் பயணம் செய்ய துவங்கி விட்ட போது (ஹதீஸ்களின் தூய்மை) வெகு தொலைவுக்குச் சென்று விட்டது என்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(எந்த வாகனம் பயணத்திற்கு ஏற்றது என்று பரிசீலிக்காது கண்ட வாகனங்களிலும் பயணம் செய்வது போல ஹதீஸ்களை ஆராயாது கேட்டவற்றை எல்லாம் கூறத் துவங்கி விட்டதையே இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்)

(குறிப்பு: ஹாகிமிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 28*

உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்கள் எங்களை 'கூபாவுக்கு அனுப்பினார்கள். (அதற்கேற்ற வகையில்) எங்களைத் தயார் படுத்தினார்கள். ஸிரார் என்று சொல்லப்படும் இடம்வரை எங்களுடன் அவர்களும் நடந்து வந்தார்கள். 'ஏன் உங்களுடன் நான் நடந்து வருகிறேன்' என்பதை நீங்கள் அறிவீர்களா? என்று கேட்டார்கள். அன்ஸார்(களாகிய எங்)களின் தகுதிக்காகவும், அல்லாஹ்வுடைய தூதரின் தோழமை (எங்களுக்கு இருக்கிறது) என்ற தகுதிக்காகவுமே (எங்களுடன் நடந்து வருகிறீர்கள்) என்று நாங்கள் கூறினோம். (அவ்வாறில்லை! முக்கியமான) ஒரு செய்தியை உங்களுக்குக் கூற விரும்பியே நான் உங்களுடன் நடந்து வருகிறேன். (அதை சொல்வதற்காக) நான் உங்களுடன் நடந்து வந்ததால் (அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து) அதைப் பேணி நடப்பீர்கள் என்றும் நான் விரும்பினேன் என்று கூறிவிட்டு, நீங்கள் ஒரு சமுதாயத்தினரிடம் செல்கிறீர்கள்.

தண்ணீர் பாத்திரம் கொதிக்கும் போது எவ்வாறு நிலையற்றிருக்குமோ அது போல குர்ஆன் அவர்களிடம் ஆழமாக பதியாததால் அது பற்றி நிலையற்ற தன்மை அவர்களிடம் உண்டு. (நேரடி மொழிபெயர்ப்பு

அல்ல, கருத்து மட்டும் தரப்பட்டுள்ளது.)

உங்களை அவர்கள் காணும் போது உங்களை நோக்கி (ஆர்வமுடன்) தங்கள் கழுத்தை நீட்டுவார்கள். 'நபித்தோழர்கள்' என்று (பெருமிதத்துடன் உங்களைப் பற்றி) கூறுவார்கள். எனவே நபி (ஸல்) அவர்கள் வழியாக அறிவிப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள்! பின்னர் நானும் உங்களுடன் (இது விஷயத்தில்) கூட்டாகிக் கொள்கிறேன் என்று உமர் (ரலி) கூறியதாக கர்ளா இப்னு கஃபு (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் ஹாகிமிலும் இடம் பெற்றுள்ளது)

(குறிப்பு: குர்ஆன் ஆழமாகப் பதிந்துவிடாத அந்த சமுதாயத்தில் ஹதீஸ்கள் அதிக அளவில் கூறப்பட்டால் அது குர்ஆனுடன் கலந்து விடுமோ என்று அஞ்சியே உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

### *ஹதீஸ் எண்: 29*

நான் ஸஃது இப்னுமாலிக் (ரலி) அவர்களுடன் மக்காவிலிருந்து மதீனா வரை பயணத் தோழனாக இருந்தேன். (அப்பயணத்தின் போது), நபி (ஸல்) அவர்கள் வழியாக ஒரு ஹதீஸைக் கூட அவர்கள் கூற நான் கேட்கவில்லை என ஸாயிப் இப்னு யஸீத் கூறினார்கள்.

## பாடம்: *4* நபி (ஸல்) பெயரால் திட்டமிட்டுப் பொய் கூறுவது கண்டிக்கத் தக்கது

### *ஹதீஸ் எண்: 30*

திட்டமிட்டு என் பெயரால் எவரேனும் பொய் கூறினால் அவர் தனது தங்குமிடத்தை நரகமாக ஆக்கிக் கொள்ளட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: புகாரி, முஸ்லிம், அஹ்மத், திர்மிதி உட்பட அனைத்து ஹதீஸ் கிரந்தங்களிலும் இது இடம் பெற்றுள்ளது)

## *ஹதீஸ் எண்: 31*

என் பெயரால் பொய் கூறாதீர்கள்! ஏனென்றால் என் பெயரால் பொய் கூறுவது நரகில் சேர்க்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.)

## *ஹதீஸ் எண்: 32*

யார் என் பெயரால் பொய் கூறுகிறானோ, அவன் தனது தங்குமிடத்தை நரகமாக ஆக்கிக் கொள்ளட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். 'வேண்டுமென்றே' என்ற வார்த்தையையும் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக நான் நினைக்கின்றேன் என்று அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது)

## *ஹதீஸ் எண்: 33*

யார் என்மீது திட்டமிட்டு பொய் கூறுகின்றானோ அவன் தனது தங்குமிடத்தை நரகமாக ஆக்கிக் கொள்ளட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.)

## *ஹதீஸ் எண்: 34*

நான் சொல்லாத ஒன்றை என் மீது யார் இட்டுக்கட்டிக் கூறுகிறானோ அவன் தனது தங்குமிடத்தை நரகமாக்கிக் கொள்ளட்டும்! என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள்

அறிவிக்கிறார்கள்.

### ஹதீஸ் எண்: 35

என்னைப் பற்றி அதிகமாக அறிவிப்பதை விட்டும் உங்களை நான் எச்சரிக்கிறேன், என் பெயரால் சொல்வதென்றால் உண்மையையே சொல்ல வேண்டும், நான் சொல்லாத ஒன்றை என் பெயரால் எவரேனும் கூறினால் அவர் தனது தங்குமிடத்தை நரகமாக ஆக்கிக் கொள்ளட்டும்! என்று நபி (ஸல்) அவர்கள் இந்த மிம்பர் (படி) மீது இருந்து கூற நான் செவியுற்றிருக்கிறேன் என்று அபூகதாதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் அஹ்மத், தாரிமி ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.)

### ஹதீஸ் எண்: 36

இப்னு மஸ்வூது (ரலி) மற்றும் சிலரிடம் நான் (ஹதீஸ்களைக்) கேட்பது போல், நீங்கள் நபி (ஸல்) வாயிலாக எந்த ஒன்றையும் கூற நான் கேட்டதில்லையே! அது ஏன் என்று ஸுபைர் இப்னுல் அவாம் (ரலி) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் 'நான் இஸ்லாத்தை ஏற்றதிலிருந்து நபி (ஸல்) அவர்களை நான் பிரிந்தது இல்லை, எனினும் 'யார் என் பெயரால் பொய் கூறினானோ அவன் தனது தங்குமிடத்தை நரகமாக ஆக்கிக் கொள்ளட்டும்' என நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஒரு சொல்லை நான் செவியுற்றுள்ளேன். (அதற்கு அஞ்சியே நான் அதிகமாக அறிவிப்பதில்லை) என்று ஸுபைர் இப்னுல் அவாம் (ரலி) கூறியதாக அவரது மகன் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்தச் செய்தி புகாரியிலும் இடம் பெற்றுள்ளது.)

### ஹதீஸ் எண்: 37

யார் என் பெயரால் வேண்டுமென்றே பொய் கூறுகிறானோ அவன் தனது தங்குமிடத்தை நரகமாக ஆக்கிக் கொள்ளட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஸயீத் (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் முஸ்லிம் நூலில் இடம் பெற்றுள்ளது)

### ஹதீஸ் எண்: 38

நிச்சயம் பொய் தான் என்று தெரிந்து கொண்டே என் பெயரால் யாரேனும் ஒரு செய்தியைக் கூறினால் அவனும் பொய்யர்களில் ஒருவனாவான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

***ஹதீஸ் எண்*: 39, 40, 41**

மேற்கூறிய இதே ஹதீஸே ஸமுரத் இப்னு ஜுன்துப் (ரலி) அறிவிப்பதாக *39* வது ஹதீஸும், அலி (ரலி) அறிவிப்பதாக *40* வது ஹதீஸும், முகீரா இப்னு ஷு்பா (ரலி) அறிவிப்பதாக *41* வது ஹதீஸும் இடம் பெற்றுள்ளது.

(குறிப்பு: இந்த நான்கு ஹதீஸ்களும் முஸ்லிம் நூலிலும் இடம் பெற்றுள்ளது.)

***ஹதீஸ் எண்*: 42**

கண்களில் கண்ணீரை வரவழைத்து உள்ளங்களை நடுங்கச் செய்யும் அரிய உரை ஒன்றை நபி (ஸல்) அவர்கள் நிகழ்த்தினார்கள். 'அல்லாஹ்வின் தூதரே! (உலகிலிருந்து) விடை பெற்றுச் செல்பவரின் உரை போன்று நீங்கள் உபதேசம் செய்கிறீர்கள், எனவே எங்களிடம் (பலமான) உறுதிமொழியைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. 'இறையச்சத்தையும், (உங்கள் தலைவர்) நீக்ரோ அடிமையாயினும் செவிமடுத்துக் கட்டுப்பட்டு நடப்பதையும் அவசியமாக்கிக் கொள்ளுங்கள்! எனக்குப் பின்னால் கடுமையான கருத்து வேறுபாடுகளைக் காண்பீர்கள்! அப்போது என் சுன்னத்தையும், நேர்வழி நின்ற கலீபாக்களின் சுன்னத்தையும் பற்றிக் கொள்ளுங்கள்! அதனைக் கடவாய்ப் பற்களால் கடித்துக் கொள்ளுங்கள்! (மார்க்கத்தில்) பதிதாக தோற்றுவிக்கப்பட்ட காரியங்களைப் பற்றி உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில் ஒவ்வொரு 'பித்அத்தும்' வழிகேடாகும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், என இர்பாழ் இப்னு ஸாரியா (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் அஹ்மத், அபூதாவூது, திர்மிதி ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது)

***ஹதீஸ் எண்: 43***

கண்கள் கண்ணீர் வடித்து, உள்ளங்கள் நடுங்கும் விதமாக நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அல்லாஹ்வின் தூதரே! நிச்சயமாக இந்த உரை (உலகத்திலிருந்து) விடை பெற்றுச் செல்லும் உரை தான். எனவே எங்களிடம் என்ன உறுதிமொழி கேட்கிறீர்கள்? என்று நாங்கள் கேட்டோம். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'நிச்சயமாக நான் உங்களை வெள்ளை வெளேர் என்ற வழியில் விட்டுச் செல்கிறேன். அதில் இரவும் பகலைப் போன்றது. நாசமாகி விடுபவனைத் தவிர வேறு எவரும் அந்தப் பாதையிலிருந்து சருக மாட்டான். உங்களில் யார் (உனக்குப் பின்) வாழ்கிறாரோ அவர் ஏராளமான கருத்து வேறுபாடுகளைக் காண்பார்.

என் சுன்னத்திலிருந்தும், நேர்வழி நின்ற கலீபாக்களின் சுன்னத்திலிருந்தும் எதை அறிகிறீர்களோ அதைப் பற்றிக் கொள்ளுங்கள். அதனைக் கடவாய்ப் பற்களால் கடித்துக் கொள்ளுங்கள்! (உங்கள் தலைவர்) நீக்ரோ அடிமை என்றாலும் (அவருக்கு) கட்டுப்பட்டு நடப்பதை அவசியமாக்கிக் கொள்ளுங்கள்! நிச்சயமாக மூமின் கடிவாளம் இடப்பட்ட ஒட்டகம் போன்றவனாவான். எங்கு இழுக்கப்பட்டாலும் அவன் இழுபடுவான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இர்பாழ் இப்னு ஸாரியா (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் அஹ்மது, ஹாகிம் ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது.)

***ஹதீஸ் எண்: 44***

மேற்கூறிய அதே செய்திதான் 44-வது ஹதீஸாகவும் இடம் பெற்றுள்ளது. எனினும் அதில் (ஒரு நாள்) சுபுஹ் தொழுகைக்குப் பின் இந்த உபதேசத்தைச் செய்ததாகக் கூறப்படுகிறது.

***ஹதீஸ் எண்: 45***

நபி (ஸல்) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தும் போது அவர்களின் இரு கண்களும் சிவந்து விடும், அவர்களின் குரல் உயரும், அவர்களின் கோபம் கடுமையாகும், 'ஸப்பஹகும் வ மஸ்ஸாகும்' என்று கூறி படையினரை எச்சரிப்பவர் போல் ஆகிவிடுவார்கள். (காலை, மாலை எல்லா நேரத்திலும் எதிரிகள் தாக்கக்கூடும், அதனால் எல்லா நேரங்களிலும் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுங்கள்! என்று உணர்த்துவதற்காக இந்த வார்த்தை கூறப்படும்) சுட்டு விரலையும், நடு விரலையும் சேர்த்துக் காட்டி நானும் யுகமுடிவு நாளும் இப்படி (அருகருகே) உள்ள நிலையில் நான் அனுப்பப்பட்டுள்ளேன் என்று கூறுவார்கள். பின்னர், செய்திகளில் சிறந்தது இறைவனின் வேதமாகும், வழிகாட்டுதல்களில் சிறந்தது முஹம்மதுடைய வழிகாட்டுதலாகும். காரியங்களில் மிகவும் கெட்டது (மார்க்கத்தின் பெயரால்) பின்னர் உருவாக்கப்பட்டவைகளாகும். ஒவ்வொரு பித்அதும் வழிகேடுதான் என்றும் கூறுவார்கள். யாரேனும் சொத்துக்களை விட்டுச் சென்றால் அது அவனது குடும்பத்திற்கு உரியதாகும். யாரேனும் கடனையோ, சந்ததிகளையோ விட்டுச் சென்றால் பொறுப்பு என்னைச் சேர்ந்தது என்றும் கூறுவார்கள் என ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அறிவித்தார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் முஸ்லிமிலும் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்*: 46

(மனிதனுக்கு நேர்வழி காட்டுபவை) இரண்டே இரண்டு தான், ஒரு சொல்லும் ஒரு வழி காட்டுதலுமே அவை. சொற்களில் சிறந்தது அல்லாஹ்வின் சொற்களாகும். வழிகாட்டுதலில் சிறந்தது முஹம்மதின் வழிகாட்டுதலாகும். புதிதாக (மார்க்கத்தின் பெயரால்) உருவாக்கப்பட்டவைகளை விட்டும் உங்களை நான் உச்சரிக்கிறேன். புதிதாக உருவாக்கப்பட்டவைகளே காரியங்களில் மிகவும் கெட்டதாகும். புதிதாக உருவாக்கப்பட்ட ஒவ்வொன்றும் (பித்அத் எனும்) அனாச்சாரமாகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடுதான். உங்கள் வாழ்நாள் அதிகமாகி அதனால் உங்கள் உள்ளங்கள் இறுகி விடக்கூடாது. எது இனி வரவிருக்கிறதோ அதுவே சமீபமானதாகும். எது இனி வரப்போவதில்லையோ அதுவே தூரமானதாகும். தன் தாய் வயிற்றிலேயே துர்பாக்கியசாலியாக ஆனவனே உண்மையில்

துர்பாக்கியசாலியாவான். பிறரால் திருத்தப்படுபவனே பாக்கியசாலி. அறிந்து கொள்க! மூமினுடன் போர் புரிதல் குப்ரு (இறை மறுப்பு) ஆகும். அவனை ஏசுதல் பாவமாகும். ஒரு முஸ்லிம் தன் சகோதரனை மூன்று நாட்களுக்கு மேல் பகைத்திருக்கலாகாது, பொய்யை விட்டும் உங்களை நான் எச்சரிக்கிறேன். விளையாட்டாகவோ வினையாகவோ பொய் அறவே கூடாது.

ஒரு மனிதன் தன் சிறு குழந்தைக்கு (எதையேனும்) வாக்களித்து விட்டு பின்னர் அதை நிறைவேற்றாதிருக்கக் கூடாது. ஏனெனில் பொய் குற்றங்களுக்கு பாதை அமைக்கும். குற்றங்கள் நரகத்திற்கு வழிகாட்டும். உண்மை நன்மைக்கு வழிகோலும். நன்மை சுவனத்திற்கு வழிகாட்டும். உண்மையாளனைப் பற்றி 'உண்மை சொன்னான், நன்மை செய்தான்' என்று கூறப்படுவதுண்டு. பொய்யனைப் பற்றி 'பொய்யுரைத்தான், குற்றம் புரிந்தான்' என்று கூறப்படுவதுண்டு. அறிந்து கொள்க! ஒரு அடியான் பொய் சொல்லத் துவங்குவான், முடிவில் பெரும் பொய்யன் என்று இறைவனிடத்தில் எழுதப்பட்டு விடுவான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

***ஹதீஸ் எண்: 47***

'அவன் தான் இந்த வேதத்தை உம்மீது இறக்கியருளினான். அவற்றில் திட்டவட்டமான வசனங்களும் உள்ளன. அவை தான் அவ்வேதத்தின் அடிப்படையாகும். மற்றும் சில (இலக்கிய உவமைகள் அடங்கிய) முதஷாபிஹாத் என்னும் வசனங்களாகும். எவரது உள்ளங்களில் வழிகேடு உள்ளதோ அவர்கள் தவறான அர்த்தம் நாடியும், குழப்பத்தை நாடியும் (உவமையாக கூறப்படுபவற்றை விளங்காது) அதனைப் பின்பற்றுவார்கள். அதன் விளக்கத்தை அல்லாஹ்வும், கல்வியில் திறமைமிக்கோரையும் தவிர மற்றவர்கள் அறிய மாட்டார்கள். நாங்கள் இதை நம்பினோம். அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்தே உள்ளன' என்று கூறுவார்கள். அறிவுடையோர் தவிர மற்றவர்கள் படிப்பினை பெறுவதில்லை. (அல்குர்ஆன் 3:7) என்ற வசனத்தை நபி (ஸல்) அவர்கள் ஓதிவிட்டு 'ஆயிஷாவே! இதில் வீண் தர்க்கம் புரிவோரை நீங்கள் காணும் போது அவர்கள் விஷயத்தில் கவனமாக இருங்கள்! அவர்களையே அல்லாஹ் நாடியுள்ளான் என்று கூறியதாக அன்னை

ஆயிஷா (ரலி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

(குறிப்பு: புகாரி, முஸ்லிம், அபூதாவூது ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 48*

'எந்த ஒரு சமுதாயமும் தான் பெற்றிருந்த நேர்வழியிலிருந்து வீண் தர்க்கம் கொடுக்கப்பட்டதால் தவிர (வேறு எதனாலும் வழி) தவறுவதில்லை' என்று நபி (ஸல்) அவர்கள் கூறி விட்டு, 'அவர்கள் வீண் தர்க்கம் செய்யும் சமூகத்தாராகவே உள்ளனர்.(*43*:*58*) என்ற வசனத்தையும் ஓதிக் காட்டினார்கள் என அபூஉமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றனர்.

(குறிப்பு: அஹ்மது, திர்மிதி ஆகிய நூல்களிலும் இது இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 49*

'பித்அத்' காரனின் நோன்பையோ, தொழுகையையோ, ஸதகாவையோ, ஹஜ்ஜையோ, உம்ராவையோ, ஜிஹாதையோ, ஈட்டுத்தொகையையோ அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான். குழைத்த மாவிலிருந்து மயிர் வெளியேறி விடுவதைப் போல் இஸ்லாத்திலிருந்து அவன் வெளியேறி விடுவான். (அதாவது குழைத்த ஈரமான மாவுடன் மயிருக்கு எப்படி பிடிப்பு இருக்காதோ, இது போல் இஸ்லாத்தின் மீது அவனுக்கு ஒரு பிடிப்பும் இராது) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று ஹுதைபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸில் இடம் பெறும் பெரும்பாலான அறிவிப்பாளர்கள் பற்றிய விபரம் தேடியவரை கிடைக்கவில்லை அறிமுகமற்றவர்களாகவே உள்ளனர்.)

### *ஹதீஸ் எண்: 50*

'பித்அத்' காரன் தனது பித்அத்தை விட்டொழிக்கும் வரை அவனது அமல்களை ஏற்க அல்லாஹ் மறுக்கிறான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள்

குறிப்பிடுகிறார்கள்.

(குறிப்பு: இப்னு அப்பாஸ் (ரலி) வாயிலாக இதை அறிவிக்கின்ற அனைவருமே ஹதீஸ் கலை வல்லுனர்களுக்கு அறிமுகமானவர்களல்லர், யாரென்றே அறியப்படாதவர்கள் என ஹாபிழ் தஹபீ அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.)

***ஹதீஸ் எண்: 51***

யார் பொய்யை, அது வீணானதாக இருக்கும் நிலையில் விட்டுவிடுகிறானோ, சுவனத்தின் ஓரத்தில் அவனுக்கு ஒரு மாளிகை எழுப்பப்படும். யார் சத்தியத்தின் பால் இருந்தும் வீண் தர்க்கத்தை விட்டுவிடுகிறானோ, அவனுக்கு சுவனத்தின் நடுப்பகுதியில் ஒரு மாளிகை எழுப்பப்படும். யார் தனது குணங்களை அழகுபடுத்திக் கொள்கின்றானோ சுவனத்தின் உயர்ந்த இடத்தில் அவனுக்கு ஒரு மாளிகை எழுப்பப்படும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸை இமாம் திர்மிதீ அவர்கள் தனது நூலில் பதிவு செய்து இது ஹஸன் என்று நற்சான்று வழங்கினாலும், இது நிராகரிக்கப்பட வேண்டிய ஹதீஸாகும். ஏனெனில் அனஸ் (ரலி) அவர்களின் வழியாக அறிவிக்கின்றவராக ஸலமா இப்னு வர்தான் என்பவர் இடம் பெறுகிறார். இவரது ஹதீஸ்கள் நிராகரிக்கத்தக்கவை என்று அஹ்மது இப்னு ஹம்பலும், ஒன்று மற்றவர் என்று எஹ்யா இப்னு முயீன் அவர்களும் குறிப்பிடுகிறார்கள். மற்றும் பல அறிஞர்களும் இவரைக் குறை கண்டுள்ளனர்.)

## பாடம்: 5 அபிப்பிராயங்களையும், அனுமானங்களையும் தவிர்த்துக் கொள்ளல்

***ஹதீஸ் எண்: 52***

அல்லாஹ் கல்வியை ஒரேயடியாக பறித்துக் கொள்வதில்லை, எனினும் அறிஞர்களைக் கைப்பற்றுவதன் மூலம் கல்வியைக் கைப்பற்றுகிறான். அவன் ஒரு அறிஞனையும் விட்டு வைக்காத போது, அறிவற்ற தலைவர்களை மக்கள் ஏற்படுத்திக் கொள்வார்கள்.

அவர்களிடம் கேள்வி கேட்கப்படும். அறிவற்ற முறையில் அவர்கள் தீர்ப்பு வழங்குவார்கள். தானும் கெட்டுப் பிறரையும் கெடுப்பார்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டதாக அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 53*

'அறிவில்லாத(வர்களால்) யாரேனும் தீர்ப்பளிக்கப்பட்டால் அதன் குற்றம் தீர்ப்பு அளித்தவனையே சாரும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் அபூதாவூது, தாரமி ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 54*

'திட்டவட்டமான (குர்ஆன்) வசனங்கள், நிலையான சுன்னத் (எனும் நபிவழி), நடுநிலையான கடமைகள் ஆகிய மூன்று தான் கல்வி என்பது இதற்கு அப்பாற்பட்டவைகள் உபரியானவைகளாகும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் அபூதாவூதிலும் இடம் பெற்றுள்ளது. இதன் அறிவிப்பாளர் வரிசையில் அப்திர்ரஹ்மான் இப்னு ஸியாத் அன்னயீம் என்பவரும், அப்துர்ரஹ்மான் இப்னு ராபிவு என்பவரும் இடம் பெற்றுள்ளனர் இவ்விருவரும் பலவீனமானவர்கள்.)

### *ஹதீஸ் எண்: 55*

உனக்குத் தெரிந்தவற்றைக் கொண்டே தவிர நீ தீர்ப்பு வழங்கக் கூடாது, ஏதேனும் ஒரு காரியம் உனக்கு தீர்க்க முடியாமல் போனால் அதை நீ தெரிந்து கொள்ளும் வரை, அல்லது எனக்கு எழுதிக் கேட்கும் வரை அதை நிறுத்தி வை! என்று என்னை எமன் நாட்டிற்கு அனுப்பிய போது

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

### *ஹதீஸ் எண்: 56*

'அபகரிக்கப்பட்ட பெண்களின் குழந்தைகள் பிறக்கும் வரை பனீ இஸ்ராயில்களின் காரியங்கள் சரியாகவே இருந்து வந்தன. அவர்கள் வந்து, சொந்த அபிப்பிராயங்களைக் கூறி, தானும் வழிகெட்டு, (பிறரையும்) வழிகெடுத்து விட்டனர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவித்தனர்.

(குறிப்பு: இந்த ஹதீஸில் 'இப்னு அபிர் ரிஜால்' என்பவர் இடம் பெறுகிறார். இவரைப் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கவில்லை.)

## ஈமான் பற்றிய பாடம்

### *ஹதீஸ் எண்: 57*

'ஈமான் என்பது அறுபது அல்லது எழுபதுக்கு மேற்பட்ட வாயில்களைக் கொண்டதாகும். அதில் மிகவும் கடைசி நிலையில் உள்ளது, வழியில் கிடக்கும் தொல்லை தருபவற்றை அகற்றுவதாகும். வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை, என்ற கொள்கை அதில் உயர்ந்த நிலையில் உள்ளதாகும். வெட்க உணர்வும் ஈமானில் ஒரு பகுதி தான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களில் இது இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 58*

ஒரு மனிதர் தன் சகோதரிடம் வெட்கப்படுவது (கூடாது என்பது) பற்றி போதனை செய்வதை நபி (ஸல்) அவர்கள் செவியுற்ற போது, 'நிச்சயமாக வெட்கமும் ஈமானில் ஒரு பகுதியே' என்று கூறியதாக அப்துல்லாஹ் (ரலி) அறிவிக்கிறார்.

(குறிப்பு: புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களில் இது இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 59*

'எவரது உள்ளத்தில் கடுகளவு பெருமை இருக்கிறதோ அவர் சுவர்க்கத்தில் நுழையமாட்டார், எவரது உள்ளத்தில் கடுகளவு 'ஈமான்' உள்ளதோ அவர் நரகத்தில் நுழைய மாட்டார்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: முஸ்லிமிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 60*

அல்லாஹ் மூமின்களை நரகிலிருந்து விடுவித்து, அவர்கள் மனஅமைதி அடையும் போது உங்களில் ஒருவர் உலகில் உள்ள விவகாரங்களில் தன் உரிமைக்காக தன் தோழரிடம் வாதிடுவதை விட கடுமையாக நரகில் நுழைந்து விட்ட தம் சகோதரர்களுக்காக தம் இறைவனிடம் வாதிடுவார்கள். 'எங்கள் இறைவா! எங்கள் சகோதரர்கள் எங்களுடன் தொழுதார்கள், எங்களுடன் நோன்பு நோற்றார்கள். எங்களுடன் ஹஜ் செய்தார்கள். அவர்களை நீ நரகில் புகுத்தி விட்டாயே! என்று அவர்கள் கூறுவார்கள். நீங்கள் சென்று அவர்களில் உங்களுக்கு அறிமுகமானவர்களை வெளியேற்றிக் கொள்ளுங்கள்!' என்று இறைவன் கூறுவான்.

உடனே நரகவாசிகளை நோக்கி இவர்கள் வந்து, அவர்களின் உருவங்களை அறிந்து கொள்வார்கள். அவர்களின் உருவங்களை நெருப்பு சிதைத்திருக்காது, பாதிகால் வரை நெருப்பு தீண்டியவர்களும் அவர்களில் இருப்பர். கரண்டை கால் வரை நெருப்புத் தீண்டியவர்களும் அவர்களில் இருப்பர். அவர்களை இவர்கள் வெளியேற்றுவார்கள். 'எங்கள் இறைவா! நீ எவர்கள் விஷயத்தில் அனுமதித்தாயோ அவர்களை நாங்கள் வெளியேற்றி விட்டோம்' என்று கூறுவார்கள்.

எவருடைய உள்ளத்தில் ஒரு தீனார் (தங்க நாணயம்) அளவு ஈமான் உள்ளதோ அவரையும் நரகிலிருந்து வெளியேற்றுங்கள். எவரது உள்ளத்தில் அரை தீனார் அளவு ஈமான் உள்ளதோ அவரையும், எவரது

உள்ளத்தில் கடுகளவு ஈமான் உள்ளதோ அவரையும் வெளியேற்றுங்கள் என்று இறைவன் கூறுவான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஸயீத் அல் குத்ரீ (ரலி) அறிவிக்கிறார்கள்.

யார் இதை நம்பவில்லையோ அவர், 'நிச்சயமாக, அல்லாஹ் கடுகளவும் அநீதி இழைக்கமாட்டான், நன்மைகளை அவன் பன்மடங்குகளாக ஆக்குவான், மேலும் தன் புறத்திலிருந்து மகத்தான கூலியை வழங்குவான்' (*4:4*) என்ற வசனத்தை ஓதிக் கொள்ளட்டும் என்று அபூஸயீத் (ரலி) குறிப்பிட்டார்கள்.

(குறிப்பு: இது புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.)

## *ஹதீஸ் எண்: 61*

'நாங்கள் இளைஞர்களாக இருந்த போது நபி (ஸல்) அவர்களுடன் இருந்திருக்கிறோம். குர்ஆனைக் கற்றுக் கொள்வதற்கு முன் ஈமானைக் கற்றுக் கொண்டோம். பின்னர் குர்ஆனைக் கற்று அதன் மூலம் ஈமானை அதிகப்படுத்திக் கொண்டோம்' என்று ஜுன்துப் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

## *ஹதீஸ் எண்: 62*

என் சமுதாயத்தில் தோன்றும் இரு பிரிவினருக்கு, இஸ்லாத்தில் எந்தப் பங்கும் இல்லை. (விதியை மறுக்கின்ற) கத்ரியா என்பவர்களும், (எவ்வளவு பாவம் வேண்டுமானாலும் செய்யலாம், ஈமான் மட்டும் போதும் என்று கூறுகின்ற) 'முர்ஜியா' என்பவர்களுமே அவர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் திர்மிதியிலும் இடம் பெற்றுள்ளது.)

## *ஹதீஸ் எண்: 63*

நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம், கன்னங்கரிய தலைமுடியும், வெள்ளை வெளேர் நிறமும் கொண்ட ஒரு மனிதர் வந்தார். பிரயாணத்தின் அறிகுறி எதுவும் அவரிடம் தென்பட வில்லை. எங்களில்

எவருக்கும் அவரைத் தெரியவில்லை. நபி (ஸல்) அவர்களிடம் வந்து தன் முழங்காலை அவர்களின் முழங்காலுடன் ஒட்டி உட்கார்ந்து, தன் தொடை மீது தன் கைகளை வைத்துக் கொண்டார்.

‘முஹம்மதே! இஸ்லாம் என்பது எது? என்று அவர் கேட்கலானார். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று உறுதியாக நம்புவதும், நான் நிச்சயம் அல்லாஹ்வின் தூதர் என்று உறுதி கொள்வதும், தொழுகையை நிலைநாட்டுவதும் ஸகாத் வழங்குவதும், ரமளானில் நோன்பு நோற்பதும், (இறை) இல்லத்தை ஹஜ் செய்வதுமாகும்’ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீங்கள் கூறுவது உண்மையே! என்று வந்தவர் கூறினார். இவர் கேள்வியும் கேட்டுவிட்டு அதை உண்மை எனவும் கூறுகிறாரே! என்று நாங்கள் வியப்படைந்தோம்.

‘முஹம்மதே! ஈமான் என்பது எது?’ என்றார். அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய தூதர்களையும், அவனது வேதங்களையும், இறுதி நாளையும், நன்மை தீமை உட்பட விதியையும் நம்புவதே ஈமான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீங்கள் கூறுவது உண்மையே! என்று அவர் சொன்னார். கேள்வியும் கேட்டுவிட்டு, அதை உண்மைப்படுத்தவும் செய்கிறாரே என்று நாங்கள் வியப்படைந்தோம்.

‘முஹம்மதே! இஹ்ஸான் என்பது எது?’ என்று வந்தவர் கேட்டார். இறைவனை நீ காண்பது போல் அவனை வணங்குவது தான் (இஹ்ஸான்). நீ அவனைக் காணாவிட்டாலும் நிச்சயம் அவன் உன்னைக் காண்கிறான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

‘யுகமுடிவு நாள் எப்போது?’ என்றார் அவர். இது பற்றிக் கேட்பவரை விட (அதாவது உங்களைவிட) கேட்கப்படுபவர் (அதாவது நான்) மிக அறிந்தவனில்லை என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.

‘அதன் அடையாளம் எவை?’ என்று அவர் கேட்டார். ஒரு அடிமைப்பெண் தன் எஜமானியை ஈன்றெடுப்பதும், ஆடு மேய்த்துக் கொண்டு, வறிய நிலையில் செருப்பணியாமலும் நிர்வாணிகளாகவும் இருந்தவர்கள் உயர்ந்த கட்டிடங்களை எழுப்புவதை நீர் காண்பதும் அந்த அடையாளங்களாகும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மூன்று நாட்களுக்குப் பின் என்னை நபி ஸல் அவர்கள் சந்தித்து ‘அந்த மனிதர் யாரெனத் தெரியுமா?’ என்று கேட்டார்கள். ‘அல்லாஹ்வும், அவனது தூதருமே நன்கறிந்தவர்கள்’ என்றேன். அவர் தான் ஜிப்ரீல்! உங்கள் மார்க்க நடைமுறைகளைக் கற்றுத்தருவதற்காக உங்களிடம் அவர் வந்தார் என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள். இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்.

(குறிப்பு: ஒரு சில மாற்றங்களுடன் இந்த ஹதீஸ் புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.)

## ***ஹதீஸ் எண்: 64***

நபி ஸல் அவர்கள் ஒரு நாள் மக்களிடம் வந்தார்கள். அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, ‘அல்லாஹ்வின் தூதரே! ஈமான் என்பது எது?’ என்று கேட்டார். அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும் அவனது வேதங்களையும் அவனது தூதர்களையும், அவனது சந்திப்பையும் நம்புவதுடன், இறுதியாக திரும்பவும் எழுப்பப்படுவதையும் நீங்கள் நம்ப வேண்டும் என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதரே! இஹ்ஸான் என்பது எது? என்று அவர் கேட்டார். அல்லாஹ்வை நீ காண்பது போல் அவனை நீ வணங்குவது (இஹ்ஸான்). நீ அவனைக் காணாவிட்டாலும் நிச்சயம் அவன் உன்னைக் காண்கிறான் என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.

உலகமுடிவு நாள் எப்போது? என்றார் அவர். இது பற்றி கேட்பவரை விட கேட்கப்படுபவர் மிக அறிந்தவரில்லை. எனினும் அதன் சில அடையாளங்களை நான் உமக்குக் கூறுகிறேன். ஒரு அடிமைப் பெண் தன் எஜமானியை ஈன்றெடுப்பதும் அதன் அடையாளங்களில் ஒன்றாகும். ஆடு மேய்த்துக் கொண்டிருந்தோர் உயர்ந்த கட்டிடங்களைக் கட்டிக் கொள்வதும் அதன் அடையாளங்களில் ஒன்றாகும். ஐந்து விஷயங்களை அல்லாஹ்வைத் தவிர எவரும் அறிய மாட்டார்கள் என்று கூறிவிட்டு பின்வரும் வசனத்தையும் நபி ஸல் அவர்கள் ஓதக் காட்டினார்கள்.

கியாமத் நாள் பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. மழையை அவனே இறக்குகிறான். கார்ப்ப அறையில் உள்ளதை அவனே அறிகிறான். நாளை தான் எதை சம்பாதிப்போம் என்பதை எந்த ஆன்மாவும் அறிய முடியாது. எந்த இடத்தில் மரணிப்போம் என்பதையும் எந்த ஆன்மாவும் அறிய முடியாது.

நிச்சயமாக அல்லாஹ் அறிந்தவனும் நுண்ணறிவாளனுமாவான். (அல்குர்ஆன் *31*:*34*)

(குறிப்பு: புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் இது இடம் பெற்றுள்ளது.)

### ***ஹதீஸ் எண்*: 65**

ஈமான் என்பது உள்ளத்தால் அறிவதும், நாவால் மொழிவதும், கடமைகளைச் செயல்படுத்துவதுமாகும், என நபி ஸல் கூறியதாக அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(குறிப்பு: இதன் அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறும் 'அபுஸ்ஸல்த்' என்பவர் பலவீனமானவர் என்பது ஹதீஸ்கலை வல்லுனர்களின் ஒரு மித்த முடிவாகும்.)

### ***ஹதீஸ் எண்*: 66**

'தனக்கு விரும்பக் கூடியவைகளைத் தன் சகோதரனுக்கும் விரும்பாதவரை ஒருவன் மூமினாக முடியாது' என நபி ஸல் கூறியதாக அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

### ***ஹதீஸ் எண்*: 67**

தன் குழந்தைகள், தன் தந்தை மற்றும் எல்லா மனிதர்களை விடவும் என்னை நேசிக்காதவரை ஒருவன் மூமினாக முடியாது என நபி ஸல் கூறியதாக அனஸ் இப்னு மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: இந்த ஹதீஸ் புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது)

### ***ஹதீஸ் எண்*: 68**

என் உயிர் எவனது கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக, விசுவாசம் கொள்ளாதவரை நீங்கள் சுவர்க்கத்தில் நுழைய முடியாது. நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்காதவரை விசுவாசம் கொள்ள முடியாது. நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கும் படியான செயலை நான் உங்களுக்குக் கற்றுத் தரட்டுமா?

(என்று கேட்டு விட்டு) உங்களுக்கிடையே ஸலாமைப் பரவச் செய்யுங்கள்! என்று நபி ஸல் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: முஸ்லிமிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 69*

'முஸ்லிமை ஏசுவது குற்றமாகும், அவனைக் கொல்வது இறை மறுப்பு (குப்ரு) ஆகும்' என நபி ஸல் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(குறிப்பு: புகாரி, முஸ்லிம் ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.)

### *ஹதீஸ் எண்: 70*

'அல்லாஹ் ஒருவனுக்காக கலப்பற்ற முறையில் வாழ்ந்து, இணையற்ற இறைவனை வணங்கி, தொழுகையை நிலை நாட்டி, ஜகாத்தை வழங்கியவனாக உலகை ஒருவன் பிரிந்து சென்றால், அல்லாஹ் அவனை திருப்தி கொண்டவனாகவே அவன் மரணிப்பான்' என்று நபி ஸல் அவர்கள் கூறியதாக அனஸ் இப்னு மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள்.

செய்திகளில் கலப்படமும், மாறுபட்ட மனோ இச்சைகளும் ஏற்படுமுன், இறைதூதர்கள் தங்கள் இறைவனிடமிருந்து பெற்று பிரச்சாரம் செய்த மார்க்கம் இது தான். இதற்குச் சான்று அல்லாஹ்வின் வேதத்திலேயே இறுதியாக இறங்கிய வசனத்திலேயே உள்ளது.

'அவர்கள் திருந்தி தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தும் வழங்கி விட்டால் அவர்கள் வழியில் விட்டு விடுங்கள்' (*9:5*)

அவர்கள் திருந்தி தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தும் வழங்கிவிட்டால் அவர்கள் மார்க்கத்தில் உள்ள சகோதரர்களாவர் (*9:11*) என்று அனஸ் (ரலி) அவர்கள் இந்த ஹதீஸைத் தொடர்ந்து குறிப்பிட்டார்கள்.

(குறிப்பு: இதன் அறிவிப்பாளர் வரிசையில் அறிமுகமற்றவர்கள் இடம் பெறுவதால் இது பலவீனமானதாகும்.)

தொடரும்......